Judicial Form No.53
( See Rule 42 )
DEPOSITION OF WITNESSES
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE No.II. TIRUPATTUR
Case No CC.NO.67/2024, Cr.No.70/2024, Kurisilapet PS.
DEPOSITION OF PROSECUTION SIDE EVIDENCE No.6, Page.No.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜூ | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | கஜேந்திரன் | தொழில் | காவல் உதவி ஆய்வாளர் |
| கிராமம் | வேலூர் | மதம் | |
| மாவட்டம் | வேலூர் | வயது | 26 |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 ( Central Act 44 of 1969 ) on the 18th day of September 2025

சாட்சி ஆஜர் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை**.- (எதிரிகள் ஆஜர்)

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் கடந்த 2024-ம் ஆண்டிலிருந்து குரிசிலாப்பட்டு காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். கடந்த 14.02.2024 அன்று திருப்பத்தூர் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்றத் தகவலின் பேரில் 16.02.2024 அன்று மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்த வாதி குமார் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று காவல் நிலையம் சேர்ந்து அதன் அடிப்படையில் குரிசிலாப்பட்டு காவல் நிலையக் குற்ற எண் 70/2024, இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(1)-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அன்றைய தினமே காலை 07.00 மணிக்கு சம்பவயிடத்திற்கு சென்று சாட்சிகள் தருமன் மற்றும் உதயகுமார் ஆகியோர் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ,5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் அதே தேதியில் சாட்சிகள் குமார், பிரபாவதி,

சரண்யா, சுதா, தருமன் மற்றும் உதயகுமார் ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சம்பவம் நடந்தது உண்மையென தெரிந்ததால் 2 மற்றும் 3–ம் எதிரிகளை குரிசிலாப்பட்டு பேருந்து நிறுத்தத்திடம் வைத்து 16.02.2024 அன்று 11.00 மணியளவில் கைது செய்து தக்க வழிக்காவலுடன் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பி வைத்தேன். 1ம் எதிரி திருப்பதி வேலூர் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றதால் அவரை கைது செய்யவில்லை. பின்னர் இவ்வழக்கில் காயம்பட்ட குமார் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.சக்திகணேசன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அவருடைய வாக்கு மூலத்தில் காயம்பட்டவருக்கு ஏற்பட்டது சொற்பகாயம் என்று காயச்சான்று வழங்கியுள்ளார். **அந்த காயச்சான்றிதழ் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் இவ்வழக்கில் சாட்சிகளின் அடிப்படையிலும், ஆவணங்களின் அடிப்படையிலும் எதிரிகள் குற்றம் செய்தது உண்மையென தெரிய வந்ததால் எதிரிகள் மீது 02.03.2024 அன்று இ.த.ச. பிரிவுகள் இ.த.ச. பிரிவுகள் 294(b), 323, 506(1)–ன் கீழ் இறுதியறிக்கையை தயார் செய்து கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன்.

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் புகார்தாரரிடமிருந்து புகாரைப் பெற்றதில் இருந்து இறுதி அறிக்கை தாக்கல் செய்து வரை நான் தான் என்றால் சரிதான். இந்த வழக்கை மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் வாக்குமூலம் பெற்று பதிவு செய்தேன் என்றால் சரிதான். காயச் சான்றிதழில் 15.02.2024 அன்று காலை 09.20 மணி என்று குறிப்பிடப்பட்டுள்ளது. புகார் வாக்குமூலம் பெற்று 16.02.2024 அன்று வழக்கு பதிவு செய்த நேரம் காலை 05.00 மணி. புகார் வாக்குமூலத்தில் பெறப்பட்ட நாள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். ஆனால், நேரமும் எனது கையொப்பத்திற்கு கீழ் தேதியும் குறிப்பிடப்பட்டுள்ளது. மருத்துவமனையில் புகார் வாக்குமூலம் எந்த தேதியில் பெறப்பட்டதாக புகார்வாக்குமூலத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் இருந்து எப்போது தகவல் கிடைத்தது என்பது முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தவறான புகாரின் அடிப்படையில் எதிரியின் மீது நடக்காத சம்பவத்திற்காக இறுதி

அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. அ.சா.1 எழுத்துமூலமாக கொடுத்த புகாரை மறைத்து பொய் புகார் தயார் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 13.02.2024 அன்று தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்கு சென்றது குறித்து சாட்சிகள் கூறியுள்ளார்கள் என்றால் சரிதான். அந்த மருத்துவரை இந்த வழக்கில் சாட்சியாக சேர்க்கவில்லை என்றாலும் அது எந்த மருத்துவமனை என்று குறிப்பிடவில்லை என்றாலும் சரிதான். 15.02.2024 காலை 09.15 மணிக்கு அ.சா.1க்கு ஏற்பட்டுள்ள காயம் புதிதாக ஏற்பட்ட காயங்கள் என்று குறிப்பிட்ப்பட்டுள்ளதால் அந்த காயத்திற்கும் எதிரிகளுக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர் தயார் செய்யப்பட்ட தேதி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரி திருப்பதி தான் உண்மையில் பாதிக்கப்பட்ட நபர் என்றால் சரியல்ல. எதிரி திருப்பதி அளித்த புகாரின் அடிப்படையில் அ.சா.1ன் மீது 71/2024–ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளேன் என்றால் சரிதான். எதிரிகள் அ.சா.1ஐ கன்னத்தில் அடித்ததாக தான் எனது புலன் விசாரணையில் தெரிய வந்தது என்றால் சரிதான். கன்னத்தில் அடித்ததற்கு ஆதரவாக ஆவணங்களும் சாட்சிகளும் உள்ளதா என்றால் உள்ளது.புகார்தாரர் கொடுத்த வாக்குமூலத்தில் கன்னத்தில் அறைந்ததாக உள்ளது. அதற்கு ஆதரவாக காயச் சான்றிதழில் உள்ளதா என்றால் இல்லை. அ.சா.1ற்கு நெஞ்சின் மீது கத்தியால் குத்தியதாக மருத்துவச் சான்று இல்லை என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையிலானவர்கள் சரண்யாவின் ஜாக்கெட்டை கிழித்ததாகவோ இழுத்ததாகவோ வாக்குமூலம் அளிக்கவில்லை என்றால் சரிதான். புகார்தாரரை விசாரித்த அன்றைய தினமே எதிரியிடம் புகார் வாக்குமூலம் பெற்று குற்ற எண்.71/2024 என்று வழங்கியுள்ளேன் என்றால் சரிதான். உண்மையில் பாதிக்கப்பட்டது எதிரிகள் தான் என்றாலும் நானும் புகார்தாரரும் சேர்ந்து எதிரிகளுக்கு எதிராக இந்த பொய்யான வழக்கை தயார் செய்துள்ளோம் என்றாலும் எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Typed to my dictation in open Court, read over and interpreted to the Witness. Admitted and acknowledged by him/her to be Correct.

JUDICIAL MAGISTRATE NO.II

KOVENDHAN S

Digitally signed by KOVENDHAN S
DN: cn=KOVENDHAN S, ou=TIRUPPATHUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Location: TIRUPATHUR
Date: 2025.09.18 19:34:30 +0530

Judicial Magistrate No.II,
Tirupathur.